வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 7.5.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்து, விவரங்களை எடுத்துக் கூறினார்.

எல்லைப் புற மாநிலங்களின் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உயர்நிலைக் கூட்டம் நடத்தி உள்ளார்

புதுச்சேரி உட்பட, நாட்டின் 244 குடிமை பாதுகாப்பு மாவட்டங்களில், குடிமைப் பாதுகாப்பு ஒத்திகை இன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்தியா, ஸ்டார்-அப் நிறுவனங்கள், தொழில் முனைவோர் மற்றும் இளம் உள்ளங்களுக்கு, விண்வெளித் துறையை, திறந்து விட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மோடி – முர்மு

பாகிஸ்தானிய தீவிரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்து, விவரங்களை எடுத்துக் கூறினார். முன்னதாக இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக்

கூட்டத்தில், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்தியதற்காக, பாதுகாப்புப் படைகளுக்கு பிரதமர் பாராட்டுத் தெரிவித்தார். ராணுவ நடவடிக்கையை பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேற்று இரவு முழுவதும் தொடர்ந்து கண்காணித்து வந்ததும் குறிப்பிடத் தக்கது. இதற்கிடையே, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து, மத்திய அரசு நாளை புதுடெல்லியில், அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. நாளை காலை 11 மணிக்கு நடைபெற உள்ள இக்கூட்டத்தில், ராணுவ நடவடிக்கை பற்றிய விவரங்கள், அனைத்து கட்சித் தலைவர்களுக்கு எடுத்துக் கூறப்படும்.

*அமைச்சரவை*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், ஐடிஐ தொழில்பயிற்சி நிலையங்களுக்கான தேசிய திட்டத்தை தரம் உயர்த்தவும் தேசிய அளவில் 5 செவ்வியல் திறன் மேம்பாட்டு மையங்களை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. கடந்த நிதியாண்டு மற்றும் நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் ஒதுக்கீட்டிலிருந்து 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், மத்திய நிதி ஆதரவு திட்டமாக, இத்திட்டம் செயல்படுத்தப்படும் என, திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சகம், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. ஜம்மு-காஷ்மீர், கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் சட்டீஸ்கரில் நிறுவப்பட்ட, 5 ஐஐடி, உயர்கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்கம் செய்யவும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டு தொடங்கி 4 ஆண்டுகளில், மொத்தம் 11 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட உள்ள இத்திட்டத்தினால், சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில், 6 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில ஏதுவாகும் என்று மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுஅல்லாது, நாட்டில் 5 அதிநவீன ஆராய்ச்சி பூங்காக்களை புதிதாக அமைக்கவும், தொழில் நிறுவனங்களுக்கும்-கல்வி நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தவும், முடிவு செய்யப்பட்டுள்ளது.

*அமித் ஷா உரையாடல்*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து, எல்லைப்புற நிலவரங்கள் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, 10 எல்லைப்புற மாநிலங்களுடன் உயர்நிலை ஆலோசனை மேற்கொண்டார். இது குறித்து கூடுதல் விவரங்கள்...............

(வாய்ஸ்)

*அமித் ஷா உரையாடல்*

(வாய்ஸ்)

மத்திய உள்துறை அமைச்சர் நடத்திய உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில், ஜம்மு – காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத், உத்தரப்பிரதேஷ், பீஹார், சிக்கிம் உட்பட, எல்லைப்புற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் கலந்து கொண்டன. எல்லைப் பகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் அறிவுறுத்தி உள்ளார். இணை ராணுவப் படைகளில், விடுப்பில் சென்றுள்ள ஜவான்களை உடனடியாக திரும்ப அழைக்கவும், அவர் உத்தரவிட்டுள்ளார். சிவிலியன்களின் பாதுகாப்பே அரசின் உயர் முன்னுரிமை என்றும் மத்திய உள்துறை அமைச்சர் கூறி உள்ளார்.

தோவல்

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் இன்று அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஐக்கிய அரபு எமிரேட்டுகள், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களைத் தொடர்பு கொண்டு, ராணுவ நடவடிக்கை மிகுந்த கட்டுப்பாட்டுடன், பிரச்சனையை மேலும் தீவிரமாக்காத விதத்தில் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதை எடுத்துக் கூறினார். நிலவரங்களை மேலும் தீவிரமாக்கும் எண்ணம் இந்தியாவிற்கு இல்லை என்றாலும், பாகிஸ்தான் நிலவரங்களை தீவிரமாக்கினால், வலுவான முறையில் பதிலடி கொடுக்க தயார் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

வரவிருக்கும் நாட்களில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இன்னும் பல நாடுகளைத் தொடர்பு கொள்வார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒத்திகை

போர்ச் சூழல் ஏற்பட்டால், சிவில் நிர்வாகத்தினர், பாதுகாப்பு படையுடன் இணைந்து எவ்வாறு செயல்பட வேண்டும், பொது மக்களை எப்படி உஷார்படுத்தி பாதுகாக்க வேண்டும் என்பது பற்றிய, குடிமை பாதுகாப்பு ஒத்திகை, நாட்டின் 244 குடிமை பாதுகாப்பு மாவட்டங்களில் இன்று மேற்கொள்ளப்பட்டது. பொது மக்களின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு படையினர் ஒத்திகையில் ஈடுபட்டனர். தமிழகத்தில் சென்னை துறைமுகத்திலும். கல்பாக்கம் அணுமின்நிலையத்திலும் ஒத்திகை நடத்தப்பட்டது. புதுச்சேரியில் வான்வழி தாக்குதலின் போது துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றிய, ஆபரேஷன் அப்யாஸ் ஒத்திகை, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தலைமையில், லாஸ்பேட் விமான தளம் அருகே இன்று மாலை மேற்கொள்ளப்பட்டது. காவல், பேரிடர் மேலாண்மை, சுகாதாரம், பொதுப் பணி, மின்சாரம், தீயணைப்பு உள்ளிட்ட பல்வேறு துறையினரும் ஊர்க்காவல் படையினர், மற்றும், தன்னார்வலர்களும் இதில் பங்கேற்றனர். இது ஒத்திகை மட்டுமே என்பதால் பொது மக்கள் பீதியடைய தேவையில்லை என்று மாவட்ட நிர்வாகம் முன்கூட்டியே தெளிவுபடுத்தி இருந்தது.

மோடி-விண்வெளி

இந்தியா, ஸ்டார்-அப் நிறுவனங்கள், தொழில் முனைவோர் மற்றும் இளம் உள்ளங்களுக்கு, விண்வெளித் துறையை, திறந்து விட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். தற்போது இந்தியாவில் 250-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் விண்வெளித் துறையில் செயல்பட்டு வருவதாக, அவர் தெரிவித்துள்ளார். விண்வெளித் துறையில் இந்தியாவின் ஆர்வத்திற்கு, ககன்யான் திட்டமே சாட்சி என்று விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான உலக மாநாட்டிற்கு அனுப்பி உள்ள வீடியோ செய்தியில் பிரதமர் கூறி உள்ளார். வரவிருக்கும் வாரங்களில்

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான, இஸ்ரோ-நாசா கூட்டுத் திட்டத்தின் கீழ் இந்திய விண்வெளி வீரர் ஒருவர் விண்வெளிக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதாவும், 2035-ஆம் ஆண்டிற்குள் விண்வெளியில் பாரதிய விண்வெளி நிலையம் அமைந்துவிடும் என்றும் அவர் கூறி உள்ளார். 2040-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் காலடிச் சுவடுகள் நிலவில் பதியும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கருத்து

பாகிஸ்தானிய தீவிரவாத முகாம்கள் மீதான இந்திய பாதுகாப்புப் படைகளின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை, கட்சி வித்தியாசம் இன்றி தலைவர்கள் பலரும் பாராட்டி உள்ளனர். இந்தியா மற்றும் இந்திய மக்கள் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும் சரியான பதிலடி கொடுக்கவும், தீவிரவாதத்தை பூண்டோடு வேரறுக்கவும், மோடி அரசு உறுதிப்பாடு கொண்டுள்ளதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார். வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டவர்களும், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை பாராட்டி உள்ளனர். தீவிரவாதத்தை வேரோடு சாய்க்கும் மன உறுதியும், வல்லமையும் இந்தியாவிற்கு இருப்பதாக பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார். இந்திய பாதுகாப்புப் படைகள் குறித்து தாம் பெருமிதம் அடைவதாக மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். சமாஜ்வாதி, திரிணமுல் காங்கிரஸ், JDU. RJD, CPM உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ராணுவ நடவடிக்கையை பாராட்டி உள்ளனர். தீவிரவாதத்திற்கு எதிராக தமிழகம், இந்திய ராணுவத்திற்கு துணை நிற்பதாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வரவேற்று, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், ராணுவ நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், இந்திய ராணுவத்திற்கும், சொந்த முறையிலும், புதுச்சேரி மக்கள்

சார்பிலும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாகக் கூறியுள்ளார். நாட்டின் பாதுகாப்பிற்காக மத்திய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் புதுச்சேரி அரசு எப்போதும் துணைநிற்கும் என்றும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

*வாய்ஸ்*

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை முன்னாள் ராணுவத்தினர் உட்பட சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் வரவேற்றுள்ளனர். புதுச்சேரியைச் சேர்ந்த முன்னாள் ராணுவ வீரர் ஹவில்தார் எழில்மாறன், எமது செய்தியாளரிடம் பேசுகையில்...

(வாய்ஸ்)

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், கொல்கத்தா-சென்னை அணிகள் மோத உள்ளன. மும்பை-குஜராத் அணிகளுக்கு இடையே, மும்பையில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், DLS முறையில், குஜராத் அணி, 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*வானிலை*

தென்மேற்கு பருவமழை, அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்க கடல் பகுதிகளில், வரும் 13-ஆம் தேதி வாக்கில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், தற்போது வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்குதிசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால். இன்றைய தினம் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவில் மாவட்டம் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி, திண்டுக்கல், கடலூர், கள்ளக் குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வெப்பநிலையை பொறுத்த வரை, வரும் 9-ஆம் தேதி வரை, அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு தான் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் 11 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி மாவட்டம் திருக்கனூரில் 4 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------